அ.வ.எண். 23/2021

பெயர் – சுப்புராஜ் (வா.சா.1)

நாள் – 05.09.2022

பிரதிவாதிகள் தரப்பில் கு.வி

என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என்னையும் சேர்த்து நான்கு பேர்க்ள. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சென்னையில் 50 வருடமாக குடியிருந்து வருகிறேன். எனது தாயார் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2006ம் ஆண்டு இறந்தார். நான் கிரையம் பெற்ற சொத்துக்கான விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 26 செண்ட் ஆகும். சொத்திற்கான நான்கு மால்கள் என்ன என்றால் கு.ரா.கந்தசாமி செட்டியார் மற்றும் பொன்னுராம் வகையறா நிலத்திற்கு தெற்கு, அ.குருநாதன் செட்டியார் மற்றும் சித்தியம்மாள் வகையறா நிலத்திற்கு வடக்கும், கிழக்கும், ரோட்டிற்கும் மேற்கு. நான் சொல்லும் நான்கு மால்கள் தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது இடத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்றாலும் பிரதிவாதி என்னுடைய இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதாக சொல்லியது வழக்கிற்காக பொய் என்றால் சரியல்ல. எனது நிருபணவாக்குமூலத்தில் பிரதிவாதி தனக்கு வேறு இடத்தில் தனியாக குடியிருக்க வீடு கட்டி கொண்டு இருப்பதாகவும் அதுவரை சுமார் 4 மாத காலம் எனக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தில் வீடு கட்ட அனுமதி கேட்டார் என நான் சொல்லியுள்ள நிலையில் எந்த வருடத்தில் எந்த இடத்தில் வீடு கட்டபோவதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இல்லை. தபசில் சொத்தில் பிரதிவாதி தான் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. தபசில் சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து கட்டிடத்தின் வயது தன்மை குறித்து அறிக்கை தாக்கல் செய்தால் மட்டுமே அந்த கட்டிடத்தின் வயது பற்றி தெரியவரும் என்றால் 2003ம் ஆண்டு நான் பணம் கொடுத்து எனது தம்பியான பிரதிவாதி பாலசுப்பிரமணியனின் மேல் பார்வையில் அந்த வீடு கட்டபட்டது. தபசில் சொத்திற்கு இன்று அளவும் கடந்த 2002 வருடத்தில் இருந்து பிரதிவாதியின் பெயரிலேயேதான் மின்இணைப்பு கட்டணம் செலுத்தபட்டு வருகிறது என்றால் 2002ம் ஆண்டு பிரதிவாதி மின் இணைப்பு பெற்றுள்ளார்.அதற்கு நான் கையொப்பம் செய்யவில்லை. அதைபற்றி கேட்டதற்கு அப்பையநாயக்கன்பட்டி காவல் நிலையத்தில் வைத்து நானோ ெஹல்பரோ எனது அண்ணன் ஆன என்னை போன்று

கையொப்பம் செய்து மின் இணைப்பு பெற்றதாக அப்பையநாயக்கன்பட்டி காவல் நிலையத்தில் தெரிவித்தார். இன்று வரை பிரதிவாதி பெயரில் தான் மின் இணைப்பு மற்றும் வீட்டு வரிரசீதும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. என் பெயரில் தான் மின்இணைப்பு மற்றும் வீட்டு வரி ரசீது இருந்து வருகிறது. பிரதிவாதி மீது இருக்கன்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன் என்றால் இல்லை. அப்பையநாயக்கன்பட்டி காவல் நிலையத்தில் தான் புகார் கொடுத்துள்ளேன். எனது பிராதில் இருக்கன்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லி அந்த புகாரில் என்னுடைய அனுமதி இல்லாமல் பிரதிவாதி வீடு கட்டியதாக சொல்லியுள்ளேன் என்றும் எனது பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் அது அப்பையநாயக்கன்பட்டி காவல் நிலையத்தில் நடந்ததாகும். எனது அனுமதி இல்லாமல் வீடு கட்டியதாக சொல்லவில்லை. எனது அனுமதியோடு எனது பணத்தை கொண்டு பிரதிவாதி வீடு கட்டினார். போலீசார் விசாரணையில் என்னுடைய அனுமதியோடு வீடு கட்டியதாக சொல்லிவிட்டு நான் நீதிமன்றத்தில் பிராதில் எனது அனுமதி இல்லாமல் பிரதிவாதி வீடு கட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அனுமதியோடு எனது பணத்தை கொண்டு பிரதிவாதியின் மேல்பார்வையில் நான் வீடு கட்ட சொன்னேன். தபசில் சொத்திற்கு எனது பெயரில் எப்போது பட்டா வாங்கினேன் என்றால் 13.11.2020 ல் வட்டாட்சியர் பட்டா கொடுத்தார். கடந்த 28 வருடமாக பிரதிவாதி பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. பட்டா மட்டும் அல்ல வேறு எந்த ஆவணமும் கிடையாது. தபசில் சொத்தை நான் எந்த ஆண்டு கிரையம் பெற்றேன் என்றால் 01.02.1991 ல் கிரையம் பெற்றேன். 1991 ல் இருந்து 2020 வரை தாவா சொத்துக்கான பட்டா என் பெயரில் பெறாததற்கு பிராதில் காரணம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பல பஞ்சாயத்துகள் வைத்தும் நேரடியாக பிரதிவாதியிடம் கேட்டும் பிரதிவாதி கட்டுபடவில்லை என்பதால் நீதிமன்றம் செல்லவேண்டும் என்பதற்காக பட்டா பெற்றேன். கடந்த 28 ஆண்டுகாலமாக தபசில் சொத்து பிரதிவாதியின் பேரில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறாரல் என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் இருக்கும் முன்விரோதத்தை பயன்படுத்தி பிரதிவாதியை பழிவாங்கவேண்டும் என்ற

நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பிராதில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றாலும் பிராது தள்ளுபடி செய்யகூடியது என்றாலும் சரியல்ல.